நினைவூட்டு – 1

//மிக மிக அவசரம் // // தனி கவனம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.2420/அ4/2016 நாள்.06.03.2024

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக்குழு மூலம் 2023 – 2024 ஆம் கல்வி ஆண்டில் பணிபுரிந்த தற்காலிக முதுகலை ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்கள் ஜனவரி மற்றும் பிப்ரவரி பற்றுச்சீட்டு வழங்க கோருதல் – சார்பு

பார்வை 1.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.026677/சி2/இ2/2023 நாள். 09.06.2023
2.இதே எண்ணிட்ட கடித நாள்.28.02.2024

-----

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு/நகராட்சி மேல்நிலை பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக்குழு மூலம் 2023–2024ஆம் கல்வி ஆண்டில் தற்காலிக அடிப்படையில் காலிப்பணியிடங்களில் பணிபுரிந்துவந்த பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதுகலை பாட ஆசிரியர்கள் பணிபுரிந்த ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதத்திற்கான வருகைச் சான்றிதழ் மற்றும் பற்றுச் சீட்டு 07.03.2024 அன்று மாலை 04.00 மணிக்குள் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் அ4 – பிரிவில் தனிநபர் மூலம் நேரில் ஒப்படைக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

பற்றுச் சீட்டு வழங்கப்படாத பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய இயலாது எனவும் இதனால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு சார்ந்த தலைமை ஆசிரியர்களே முழுப் பொறுப்பேற்க நேரிடும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
தலைமை ஆசிரியர்கள்,
அனைத்து அரசு / நகரவை உயர்நிலை /மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.